கிறது. இருந்தாலும் நிதிப் பிரச்சினை காரணத்தால் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. எனவே படிப்படியாக அது செய்யப்படும். எதிர் காலத்திலே நிதி நிலைமைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 45, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

45—

வாணியம்பாடி தொகுதி, வெள்ளக்குட்டை கிராமத்திற்கு நகரப் பேருந்து விடுதல்.

*9597—திரு. சி. ஞானசேகரன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, வெள்ளக்குட்டை கிராமத்திற்கு நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : வாணியம்பாடி தொகுதியிலுள்ள வெள்ளக்குட்டை கிராமத்திற்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் மூன்று நகர வழித்தடப் பேருந்துகளை ஒரு நாளைக்கு மொத்தம் 16 நடைகள் இயக்கி வருகிறது.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே மூன்று நகரப் பேருந்துகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார். பல ஆண்டுகளாக அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் கூட, வெள்ளக்குட்டை என்பது மாண்புமிகு சி. ஞானசேகரன் பிறந்த புண்ணிய பூமி. (சிரிப்பு) அந்தக் கிராமத்திலே சுமார் 15,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய பெரிய வெள்ளக்குட்டை, குறிஞ்சிக்குப்பம், நன்னேரி போன்ற கிராமங்கள் எல்லாம் (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே குறுக்கிடக் கூடாது. வெள்ளக்குட்டையைச் சுற்றி பெரிய வெள்ளக்குட்டை, குறிஞ்சிக்குப்பம், வெள்ளக்கல், உண்டிகோயில் போன்ற கிராமங்களில் உள்ள 50,000 மக்கள் பயன்பெறக் கூடிய அளவிலே இருக்கிறது.

அந்த கிராமத்திற்குப் போகிறபோது பேருந்திலே நின்று கொண்டு போகக் கூடிய அவல நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பேருந்தை வாணியம்பாடி முதல் வெள்ளக் குட்டை வரை என்பதை மட்டும் எக்ஸ்குளுசிவாக வெள்ளக் குட்டை கிராமத்திற்கே விட்டால் அங்கே இருக்கக் கூடிய மக்கள் அமர்ந்து செல்லக் கூடிய வசதியானது அவர்களுக்குக் கிடைக்கும் என்பதற்காக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பிறந்த புண்ணிய பூமி என்று சொன்னார்கள். இவர்கள் பிறந்ததற்குப் பிறகு அந்த புண்ணிய பூமியே மாறியிருக்கும் என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தில் இந்த புண்ணிய பூமி யிலே பிறந்த காரணத்தினாலே உங்களைப் போன்றவர் களுடைய கோரிக்கையை அரசு உடனடியாக பரிசீலனை செய் யும். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருகிற 1 ஆம் தேதியிலிருந்து பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக்கழகம் வாணியம்பாடியிலிருந்து வெள்ளக்குட்டை கிராமத்திற்கு எக்ஸ்குளுசிவ்வாக நகரப் பேருந்துதை இயக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்றபோது ஏப்ரல் 1 ஆம் தேதி என்பதை அவர் மறந்து விட்டார் போல் தெரிகிறது. ஆகவே, அவருக்கு நினைவூட்டி 2 ஆம் தேதியிலிருந்து பேருந்தை அங்கே இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்: 46, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

46—

பூம்புகார் தொகுதி, தில்லையாடியில் கைத்தறி நூற்பாலை அமைத்தல்.

* 16885—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—